# 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இலங்கை சான்று பெற்ற முகாமைக் கணக்காளர் நிறுவகத்தில் இருந்து தகவலைக் கோருவதற்கான வேண்டுகோளை ஆரம்பிப்பதற்கான படிமுறை

தகவலுக்கான வேண்டுகோளானது RTI 01 படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு, இது கட்டாயம் இல்லை எனினும் கூட, வேண்டுகோளைப் பூர்த்தி செய்து பின்வரும் தகவல் அதிகாரியிடம் கையளிக்கப்பட வேண்டும்.

**பொதுத் தகவல் அதிகாரியின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சுமுது பாகொட (Ms. Sumudu Pagoda) |
| பதவி | : | பணிப்பாளர் செயன்முறைகள் |
| முகவரி | : | இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைக் கணக்காளர் நிறுவகம், 29/24, விசாகா தனியார் வீதி, கொழும்பு 04, இலங்கை |
| காரியாலயம் | : | 0094 11 2506391 விரிவாக்கம்: 113 |
| தொலைநகல் | : | 0094 11 2507087 விரிவாக்கம்: 118 |
| மின்னஞ்சல் | : | directoroperations@cma-srilanka.org |
| இணையத்தளம் | : | www.cma-srilanka.org |

1. வாய்மூலமோ அல்லது எழுத்து மூலமோ தகவல் வேண்டுகோளை மேற்கொள்ளும் போது, தகவல் அதிகாரியின் ஏற்றுக் கொள்ளலைப் பெற்றுக் கொள்ளவும்.
2. தகவலை வழங்குவதா இல்லையா என்னும் தீர்மானம் இயன்ற வரை விரைவாகத் தெரிவிக்கப்பட வேண்டும், எந்த நிலைமையிலும் 14 நாட்களுக்குள்ளாக இருக்கும்.
3. தகவலை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டால் தகவல் அதிகாரி தகவல் வேண்டுகையை மேற்கொண்ட பிரஜைக்கு, தகவல் அறிவதற்கான ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட கட்டண முறைமைக்கு அமைவான கட்டணம் செலுத்தப்பட்டதும் தகவல் வழங்கப்படும் என்பதை அறிவிப்பார். தகவலானது கட்டணம் செலுத்தப்பட வேண்டியது எனில், அத் தகவல் கட்டணம் மேற்கொள்ளப்பட்டு 14 நாட்களினுள் வழங்கப்படும்.
4. கட்டணம் செலுத்தப்பட்டு 14 நாட்களுக்குள் தகவல் வழங்கப்பட முடியாவிடின், தகவலைக் கோரிய நபருக்கு, தகவலை வழங்குவதற்கு மேலும் அதிகபட்சம் 21 நாட்கள் கால அவகாசம் தேவைப்படுகிறது என்னும் தகவலுடன் அதற்கான காரணமும் தெரிவிக்கப்படும்.
5. குறித்த தகவலானது பிரஜை ஒருவரது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாக இருக்கும் போது, தகவல் அதிகாரி அவ்வாறான வேண்டுகைக்கு 48 மணித்தியால நேரத்தினுள் பதிலளிப்பார்.
6. பின்வரும் சந்தர்ப்பங்களில் மேன்முறையீடு செய்யப்படலாம்:

அ. தகவலுக்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைத் தகவல் அதிகாரி நிராகரித்தல்

ஆ. வேண்டப்படும் தகவலானது, பிரிவு 5 இன் கீழ் விலக்களிக்கப் பட்டுள்ளது என்னும் காரணத்தினால் தகவலுக்கான அனுமதியைத் தகவல் அதிகாரி மறுக்கும் போது

இ. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கால எல்லை இணங்கப்படாத போது

ஈ. தகவல் அதிகாரி பூரணமற்ற, தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய தகவல்களை வழங்கும் போது

உ. தகவல் அதிகாரி கூடுதலான கட்டணங்களை அறவிடும் போது

ஊ. தகவல் அதிகாரி வேண்டப்பட்ட வடிவத்தில் தகவலை வழங்க மறுக்கும் போது

எ. வேண்டப்பட்ட தகவலுக்கான தனது அனுமதியைத் தடுக்கும் முகமாக குறித்த தகவல் வடிவம் மாற்றப்பட்டு, அழிக்கப்பட்டு அல்லது இடம் மாற்றப்பட்டுள்ளது என தகவல் வேண்டுகோளை மேற்கொண்ட பிரஜை நியாயமான பின்னணியின் அடிப்படையில் நம்பும் போது

ஏதேனும் மேன்முறையீடுகள் இருப்பின், அதற்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்கு 14 நாட்களினுள் முறையிடப்பட வேண்டும்.

**பொறுப்பு வாய்ந்த அதிகாரி**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கனிஷ்க ஜயசிங்ஹ (Mr. Kanishka Jayasinghe) |
| பதவி | : | பிரதம நிறைவேற்று அதிகாரி |
| முகவரி | : | இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைக் கணக்காளர் நிறுவகம், 29/24, விசாகா தனியார் வீதி, கொழும்பு 04, இலங்கை |
| காரியாலயம் | : | 0094 11 2506391 விரிவாக்கம்: 112 |
| தொலைநகல் | : | 0094 11 2507087 விரிவாக்கம்: 118 |
| மின்னஞ்சல் | : | ceo@cma-srilanka.org |
| இணையத்தளம் | : | www.cma-srilanka.org |

7. இந்த அறிவித்தலின் பிரிவு 6 இல் கூறப்பட்டவாறு மேன்முறையீடு ஒன்றை மேற்கொள்ளும் போது, படிவம் RTI 10 இனைப் பூர்த்தி செய்து பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடம் கையளிக்கவும். RTI 10 படிவம் கட்டாயமானது அல்ல. மேன்முறையீட்டை மேற்கொள்ளும் பிரஜை மேன்முறையீட்டை மேற்கொள்ளும் காரணத்தை நியாயப்படுத்தி RTI 10 இல் காட்டப்பட்ட அடிப்படைத் தகவல்கள் உள்ளடங்கலான கடிதம் ஒன்றின் மூலம் மேன்முறையீடு மேற்கொள்ளலாம்.

# கட்டண முறை

“பகுதி 1- பிரிவு (1) – 03.02.2017 திகதியிடப்பட்ட இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகை” (இல. 2004.∵.66) இல் வழங்கப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் பிற்பட்ட விதிகளுக்கு இணக்கமாக, கட்டண முறைமையானது பின்வருமாறு காணப்படும்:

**விண்ணப்பக் கட்டணம்:**

தகவல் வேண்டுகோளை மேற்கொள்ளும் பிரஜை ஒருவருக்கு தகவல் அறியும் உரிமைக்கான விண்ணப்பப் படிவத்திற்கோ அல்லது தகவல் அறியும் உரிமையை செயற்படுத்துவதற்காகவோ கட்டணங்கள் எதுவும் இல்லை.

**தகவலுக்கான கட்டணம்:**

1. நகல் பிரதி எடுத்தல்
   - அ. A4 (21cm X 29.7cm) தாளில் அல்லது அதனை விட சிறிய தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக, ரூபா 2.00 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 4.00 (இரு பக்கங்களும்).
   - ஆ. சட்டமுறைத் தாள் (Legal size - 21.59cm X 35.56cm) முதல் A3 (29.7 cm x 42 cm) தாள் வரையான தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக ரூபா 4.00 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 8.00 (இரு பக்கங்களும்).
   - இ. மேற்கூறப்பட்ட தாள்களை விடப் பெரிய தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக அவற்றுக்கான உண்மையான செலவு.

2. அச்சிடல்
   - அ. A4 (21cm X 29.7cm) தாளில் அல்லது அதனை விட சிறிய தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக, ரூபா 2.00 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 4.00 (இரு பக்கங்களும்).
   - ஆ. சட்டமுறைத் தாள் (Legal size - 21.59cm X 35.56cm) முதல் A3 (29.7 cm x 42 cm) தாள் வரையான தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக ரூபா 4.00 (ஒரு பக்கம்) மற்றும் ரூபா 8.00 (இரு பக்கங்களும்).
   - இ. மேற்கூறப்பட்ட தாள்களை விடப் பெரிய தாள்களில் வழங்கப்படும் தகவல்களுக்காக அவற்றுக்கான உண்மையான செலவு.

3. தகவல் வேண்டுகையை மேற்கொள்ளும் பிரஜையினால் வழங்கப்படும் தகடு, குறுந் தட்டு, USB பிரமாண்ட சேமிப்பகங்கள் அல்லது அதனை ஒத்த வேறு இலத்திரனியல் கருவிகளில் தகவலைப் பிரதி எடுப்பதற்காக ரூபா 20.00

4. இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்படும் தகடு, குறுந் தட்டு, USB பிரமாண்ட சேமிப்பகங்கள் அல்லது அதனை ஒத்த வேறு இலத்திரனியல் கருவிகளில் தகவலைப் பிரதி எடுப்பதற்காக அதற்கான உண்மையான செலவு.
5. ஏதேனும் ஆவணங்களைப் படிப்பதற்கு அல்லது சோதனை செய்வதற்கு, நிர்மாண வேலைத்தளம் ஒன்றைப் பார்வையிடுவதற்கு மணித்தியாலத்திற்கு ரூபா 50.00, அதற்கான நேரம் ஒரு மணித்தியாலத்திற்குக் கூடுதலாகக் காணப்படின், முதலாவது மணித்தியாலத்தின் பார்வையிடல் அல்லது சோதனை நேரத்துக்கான கட்டணம் இலவசம் ஆகும். இந்த நடைமுறையானது, முன்னர் பின்பற்றப்பட்ட சோதனை செய்வதற்கான கட்டணம் இலவசம் ஆகும் என்னும் நடைமுறைக்கு மாற்றமின்றி அதுவே தொடர்ந்தும் பின்பற்றப்படும்.
6. மாதிரிகள் அல்லது உருவக அமைப்புக்களுக்காக, அவற்றுக்கு உண்மையான ஏற்படும் செலவு.
7. மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும் தகவல்களுக்குக் கட்டணங்கள் ஏதும் இல்லை.

**இலவசமாக வழங்கப்படும் தகவல்கள்**

1. நகல் பிரதி எடுத்தல் அல்லது அச்சுப் பதித்தலில் நான்கு பக்கங்களில் (A4 அளவு) தயாரிக்கப்படும் அல்லது உள்ளடக்கப்படும் தகவல்களுக்குக் கட்டணங்கள் ஏதும் இல்லை
2. சாதாரணமாக இலவசமாகக் கிடைக்கக்கூடிய தகவல்கள் கட்டணமின்றியே வழங்கப்படும்.

**கட்டணம் செலுத்துவதற்கான முறை**

1. தகவல் அதிகாரியிடம் பணமாக
2. இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைக் கணக்கறிஞர் நிறுவகத்தின் கணக்காளருக்கு முகவரியிடப்பட்ட வங்கி வரைபு
3. இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைக் கணக்கறிஞர் நிறுவகத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்ட தபாலக கொடுப்பனவுத் தாள் அல்லது தபால் கட்டளை

தகவல் அதிகாரி கட்டணம் செலுத்தப்பட்ட முறை எதுவாக இருப்பினும், அதற்கான பெறுவனவுச் சிட்டை ஒன்றை வழங்குவார்.